மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, விரைவாக முடிக்கப்படும் என்று நம்புகிறேன்.

பத்தரபள்ளி, மோர்தானா அணைக்கட்டுகள்

*** 400 வினா—திரு. நா. கிருட்டிணன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், குடியேற்றம் வட்டத்தில் (1) பத்தரபள்ளி, (2) மோர்தானா ஆகிய இடங்களில் அணைக்கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) மலட்டாற்றின் குறுக்கே பத்தரபள்ளி கிராமத்தின் அருகே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் முன்னோடி ஆய்வு செய்யப்பட்டு, தற்போதைக்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. கௌண்டின்னிய நதியின் குறுக்கே மோர்தானா கிராமத்தின் அருகில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

முதலைமுத்துவாரி நீர்த் தேக்கம்

*** 401 வினா—திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் தாலுக்கா வல்லம் பகுதியில் உள்ள முதலைமுத்துவாரி அணைக்கட்டுத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) தஞ்சை வட்டத்தில் வல்லம் புதூர் கிராமத்தில் முதலைமுத்துவாரியின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் பாசனத் தலைமைப் பொறியாளரது பரிசீலனையில் உள்ளது. அது இன்னும் அரசு பரிசீலனை செய்யும் கட்டத்தை அடையவில்லை.